விலை ரூபா 1 25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 26 முஹற 16 இதழ் 240

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-10-84


அண்மைக் காலங்களில் ஆயுதப்படையினரால்

## கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மக்களே!

அமிர் பேட்டி

(சென்னை)

அண்மைக் காலங்களில் ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் அப்பாவி மக்களே என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு.அ அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

'இந்து' பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே தீவிரவாதிகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லலித் அத்துலத்

(8-ம் பக்கம் பார்க்க)

## இரண்டு சடலங்களும் கடத்தப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இனந்தெரியாத இரு இளைஞர்களின் சடலங்களும், துப்பாக்கி இளைஞர்களால் நேற்றுக்காலை கடத்திச் செல்லப்பட்டது.

காங்கேசன்துறை தையிட்டி பகுதியில் பாதுகாப்புப் படையினரைக் கண்டதும் வாகனம் ஒன்றிலிருந்து இறங்கி ஓடிய இரு இளைஞர்களைநோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அதில் ஒருவர் ஸ்தலத்திலேயே மாண்டதாகவும், மற்றவர் காயமுற்ற போதிலும் ''சயனட்'' போட்டு இறந்ததாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மரணமான இரு இளைஞர்களது சடலங்களையும், பாதுகாப்புப்படையினர் எடுத்துச் சென்று யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்குள் அடை

[8ம் பக்கம் பார்க்க]

# பத்திரிகைத் தணிக்கை

# இன்றுமுதல் ரத்து!

(நமது நிருபர்)

## நீண்டகாலமாக அமுலிலிருந்துவந்த பத்திரிகைத் தணிக்கை இன்றுமுதல் ரத்துச்செய்யப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நடந்த கலவரங்களைத் தொடர்ந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத்தணிக்கை இடையிடையே தளர்த்தப்பட்டு வந்தது. ஆனாலும் பயங்கரவாதச் செய்திகள், ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் போன்ற செய்திகள் தொடர்ந்து தணிக்கைக்குட்பட்டவையாக இருந்துவந்தன.

கடந்த ஜூன் மாதம் 6-ம் திகதி முதல் மீண்டும் தணிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. இன்று முதல் இது முற்றாக நீக்கப்படுகிறது.

### லலித் நம்பிக்கை

தணிக்கை நீக்கப்படுகின்ற போதிலும் நாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டு பத்திரிகை ஆசிரியர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளுவார்கள் என்று நம்புவதாகத் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இன்றுமாலை பத்திரிகை ஆசிரியர்களையும் அமைச்சர் சந்திக்கவிருக்கிறார்.

## புன்னாலைக்கட்டுவனில் வீடு தீக்கிரை!

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில், நேற்று முன்தினம் இரவு ஆயுதப்படையினர் சந்தேகத்தின் பேரில் சுற்றிவளைத்துத் தேடுதல்வேட்டையில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் வீடு ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் ஒரு வீட்டில் சில பெண்கள்விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## வீதியில் குண்டு!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை ஐயனார் கோவிலுக்கு முன்னாலுள்ள பிரதான வீதியில் வைக்கப்பட்டிருந்த இரு குண்டுகளை ஆயுதப்படையினர் கண்டுபிடித்து அதனைவெடிக்கவைத்துள்ளனர்.

நேற்று 1-15 மணியளவில் இக்குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன.

குண்டு வைத்ததற்கான வயர் தொடர்பை ''பிட்டு, ஆயுதப்படையினர் அப்பகுதியில்நீண்ட நேரம் சோதனையிட்ட போதிலும் கண்டு பிடிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

(மா)

## வல்வை பொலிஸ்நிலையத்துக்கு அருகே பாதுகாப்புப்படைக்கு காணி: மாற்று நடவடிக்கை!

### பிரஜைகள்குழுவிற்கு 'நளின்' உறுதி

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையத்துக்கருகில் பாதுகாப்புப்படையினரின் தேவைக்காக பொதுமக்களின் காணியைச் சுவீகரிப்பது குறித்து மாற்று நடவடிக்கை எடுப்பதாக வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவிற்கு யாழ். மாவட்ட இணைப்பதிகாரி உறுதி அளித்துள்ளார்.

வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு, நேற்று யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகே. யர் நளின் செனிவரத்தினவைச் சந்தித்து மேற்குறிப்பிட்ட காணிப் பிரச்னை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்

வல்வெட்டித்துறையில் இப்

(5-ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் திடீர் 'முற்றுகை'

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட திடீர் சோதனையில் சுமார் 150 இளைஞர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை தொடக்கம் நண்பகல் வரை மண்டைதீவைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் பலத்த சோதனைகளை மேற் காண்டனர் ஒவ்வொரு வீடு வீடாக நடைபெற்ற இந்தச் சோதனையின் போது சுமார் 150-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கிராமத்தில் பல பகுதிகளிலிருந்தும் அழைத்துச்செல்லப்பட்டு மண்டைதீவு துறைமுகத்தில்

(5ம் பக்கம் பார்க்க)

## சிவிலுடையில் வந்தவர்கள் வீதியில் நடத்திய ரகளை

### மின்சாரப்பகுதி ஊழியர்களும் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை மின்சாரப்பகுதி ஊழியர்கள் சிலர், சிவிலுடையில் வந்தவர்களால் ராக்கப்பட்டதாக யாழ் மாநகரசபை ஆணையாளருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நாவலர் வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்தியில் நேற்று நண்பகல் மின்சார வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுதே இந்த ஊழியர்கள் தாக்கப்பட்டனராம்

யாழ்ப்பாணம்பிரவுண்வீதிப் பக்கமாக ஆயுதப்படை சோதனையில் ஈடுபட்டிருந்ததாகவும் அப்போது அவ்வீதிவழியாக வானொன்று வந்துகொண்டிருந்தபொழுது பாதசாரிஒருவர் அந்த வானை மறித்து இராணுவத்தினர்சோதனையிடுவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து வானுக்குள் சிவிலுடையில் இருந்தவர்கள் இறங்கி கைக

[5ம் பக்கம் பார்க்க]

## ஜீப் கடத்தப்பட்டது

(கிளிநொச்சி)

நேற்றுமுன் தினம் மாலை கிளிநொச்சி மிருக உற்பத்தி சுகாதர ரத்தணைக்களத்துக்குச்சொந்தமான மிக்சுபிஸி ஜீப் வண்டியொன்று இனந்தெரியாத மூன்று இளைஞர்களால் அப

[5ம் பக்கம் பார்க்க]

## அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டி: யாழ்.மாவட்டம் கலந்துகொள்ளாது!

(ஏ. வி மாணிக்கம்)

அகில இலங்கைப்பாடசாலை விளையாட்டு போட்டியில் யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது

இவ்விளையாட்டுப் போட்டி கொழும்பில் நடைபெறவுள்ளது

விளையாட்டுப் போட்டிக்கான விபரங்களடங்கிய புத்தகங்களும், சுற்று நிருபங்களும் தனிச் சிங்கள மொழியில அச்சிடப்பட்டு, அவை

[5ம் பக்கம் பார்க்க]


SAKURA TRAVELS

உலகின் எந்தப் பாகத்திற்கும் பிரயாணம் செய்ய தேவையான விமான ரிக்கற்றுக்களை குறைந்த விலையிலும் கூடிய விரைவிலும் பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளுங்கள்

SAKURA TRAVELS



BERLIN பிரயாணம் செய்வோருக்கு யாழ்ப்பாணத்திலேயே ரிக்கற் குறைந்த விலையில் பதிவுசெய்து கொடுக்கப்படும்.

ஆசனங்களை நாமே பதிவுசெய்து கொடுப்போம்.

ஒவ்வொரு செவ்வாய், சனி நாட்களில் விமான சேவை உண்டு.

காசோலைகளும் (TRAVELLERS CHEQUE) இங்கேயே பெற்றுக் கொடுக்கப்படும்.



உடன் தொடர்புகொள்ளுங்கள்

SAKURA TRAVELS

233 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

152

# சரி விளம்பரம்

## விற்பனைக்கு

பலாலிவீதி கோண்டாவில் கிழக்கு சந்தியிலிருந்து 300 யார் தொலைவில் ஸ்ரேசனுக்கு போகும்வழியில் (இருபாலை வீதி) வீடுகட்டக்கூடிய நல்ல நிலையில் 1½ பரப்புகாணி விற்பனைக்குண்டு. சகலவசதிகளுடன். தொடர்பு:- அப்பாப்பிள்ளை சுப்பிரமணியம், இருபாலைவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் [135]

ஒருநாள், ஒருமாதம், ஐந்து மாதம், மற்றும் முட்டையிடும் கோழிகள் (பிறவுண் Tetras, வெள்ளை Hyline), விற்பனையுடன் வேண்டிய ஆலோசனைகளும், சேவைகளும் கொடுக்கப்படும். Aics, கால்நடைவைத்திய நிலையம், 89, இரண்டாம் குறுக்குதெரு, யாழ்ப்பாணம். [139]

பாவித்த குளிர்சாதனப் பெட்டி துவிச்சக்கரவண்டி வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் மின்சாரப்பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு "கலைச்சோலை" இல 8 இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [140]

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து கொடிகாமம், யாழ்ப்பாணம் வழியில் இருநூறுயார் தூரத்தில் புகையிரத குறிக்காட்டிக்கு அருகாமையில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கடித மூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- தி. பொன்னம்பலநாதன் அரசினர் ஆஸ்பத்திரி கொடிகாமம். [126]

Bairaha Farms Hisex வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 15-ந் திகதி திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா, பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 89

17A மணல்தரை லேன், கந்தர்மடத்தில் 1½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. கிணறுப் பங்கு, திருநெல்வேலி சிவன் கோவில் றோட், மணல்தரை லேன், இரு பக்கத்தாலும் ஒழுங்கை உண்டு. நவா எம்போறியம் 16, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 119

## தேவை

பிடவை வியாபாரத்தில் நல்ல அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை, சீமாட்டி, 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (120)

தனியார் மத்தியவகுப்பிற்கான வீடமைப்பு திட்டத்திற்குகந்த ஐம்பது பரப்பிற்கு குறைவில்லாத நல்லகுடிதண்ணீர் மின்சார வசதியுள்ள காணிதேவை விலைவிபரங்கள் காணியின்வரை படம் முதலியவற்றினுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல 132 C/o ஈழநாடு. [132]

## சேவை

தங்கள் வீடுகளின் சகல பகுதிகளும், தளபாடங்கள், உட்பட Polishing, Painting, செய்வதற்கும், விளம்பரப்பலகைகளில், மூன்று பாஷைகளிலும் எழுத்துவேலைகளும், நியாயமானமுறையில் குறித்ததவணையில் செய்து கொடுக்கப்படும் அதோடு குறிக்கப்பட்ட காலத்திற்குள், பூசப்பட்டவர்ணம், கலர் மாற்றமடைந்து பழுதடைந்தால், நியாயமானகாரணத்திற்குட்பட்டு எங்கள், செலவில் திருப்பிசெய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு 52 பழையபூங்கா வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [148]

## தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திற்கும் திருநெல்வேலிக்கும் இடையில் C. T. B அடையாள அட்டை, றைவிங் லைசன்ஸ் (கே. ராஜரட்ணம், உரும்பிராய் தெற்கு) தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்ப்பாண பஸ்நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [144]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்டநீதிமன்றம்
யாழ்ப்பாணம்

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற நன்னியன் இராசன் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்.

— மரணமெய்தியவர்

வழக்கு இல:
தத்துவம்/3822

நன்னியன் இராசன் கைம்பெண் தவமணி
யோகபுரம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

மனுதார்.

எதிராக

1. இராசன் மகன் சிவகுமார்
2. இராசன் மகள் லதாயினி
3. இராசன் மகள் கலாநிதி
4. இராசன் மகன் சிவரூபன்
5. இராசன் மகன் சிவகரன் எல்லோரும் பராயமடையாதவர்கள்.
6. சின்னத்தம்பி வசந்தன் எல்லோரும் யோகபுரம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

— எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக; மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ம் திகதி இன்று முத்திரையிடப்பட்டது.

நீதிமன்றக்சட்டளைப்படி
**கு. குலசிங்கம்**
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.
**ந. அருள்சாகரன்**
மனுதாரின் சட்டத்தரணி.
145

## கல்வி

தனிப்பட்ட முறையில் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலப் பேச்சு (O/L), (A/L) ஆங்கில இலக்கண இலக்கியம்( Shakespeare Poetry Prose) கற்றுக் கொடுக்கப்படும். இன்ஸ்பெக்டர் குருசாமி இல்லம், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். 2051

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கந்தப்பிள்ளை கைம்பெண் பத்தினிப்பிள்ளையின் மரணசாதன மற்ற மரணச்சொத்தினதும் உடமைப்பொருள்களினதும் விடயத்தில்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி 213

மரணமெய்தியவர்.

1. தாமோதரம்பிள்ளை சத்தியநாதனும்.
2. பெண் செல்வமணியும், மாவிட்டபுரம்.

மனுதார்கள்

எதிராக

கந்தப்பிள்ளை மகள் சின்னத்தங்கச்சி
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ஆந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984 ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதி.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
(ஒப்பம்)
நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்.

என்னால்தயாரிக்கப்பட்டது.
**ம. சிதம்பரநாதன்**
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.
147

## வியாபாரம் செய்க
## விளம்பரம் பெருக

## றேடியோ–ரெலிவிசன் பயிற்சி நெறிகள்

நாட்டின் பல பாகங்களிலும் கற்பிக்கின்ற, நன்கு அனுபவம்மிக்க விரிவுரையாளர் திரு. வை. தனபாலசிங்கம் அவர்களினுல் செய்முறைப் பயிற்சியுடன் கீழ் வரும் முகவரிகளில் போதிக்கப்படுகின்றன. பயிற்சி நெறியில் சேர்ந்து தொழில்நுட்ப வல்லுனராகுங்கள்.

தொடர்புகளுக்கு :

(1) G. Balamurugan
I. N. S.,
101/10, Stanley Road,
Jaffna.

BATCH I
திங்கள், புதன், வெள்ளி.
காலை 9-00—10-30 வரை
BATCH II
சனி, ஞாயிறு
காலை 9-00—11-00 வரை

ஆரம்பம் : 14/10/84 ஞாயிறு காலை 9-00 மணி.

(2) G. Balamurugan
Skantha Academy.
Post-office Road,
Chavakachcheri.

சனி, ஞாயிறு மாலை
3-30—5-30 வரை

ஆரம்பம் 14/10/84 ஞாயிறு காலை 7-00 மணி.

தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்வரும் முகவரியுடன் 13/10/84ற்கு முன்பு முத்திரையுடன் கூடிய மேலுறை அனுப்பி விபரம் பெற்றுக்கொள்ளலாம்.

(3) G. Balamurugan
Nunavil-Kalvayal
Road,
Kalvayal,
Chavakachcheri.

DIRECTOR

136

## எலக்றிக்கல் வயரிங்–மோட்டார் மெக்கானிஷம்

ஆரம்பம் 15–10–1984

கூடிய செய்முறை பயிற்சியுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பை பெறக்கூடிய முறையில் பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.

**இன்ஸ்ரிரியூட் ஒப் என்ஜினியரிங் ரெக்னெலொஜி**

11 B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம் 127

## மக்கள் பிரசுராலயம் யாழ் கிளை

பல்வேறு புதிய விடயங்களைக்கொண்ட புத்தகங்கள் வந்துவிட்டன.

உலகப் புகழ் பெற்ற

★ இலக்கியம், சிறுகதைகள், நாவல்கள்
★ அரசியல். பொருளாதாரம், சமூகவியல், ஆய்வு நூல்கள்
★ பொறியல், மருத்துவம், இரசாயனம், பௌதிகம், கணிதம் மற்றும் விஞ்ஞான நூல்கள்
★ பரிசளிப்பிற்கும், சிறுவர்க்குயான கண்கவர் சித்திரக் கதைகளும் மற்றும் கவர்ச்சிகரமான நூல்கள்
★ கார்ல் மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின் நூல்திரட்டு, ஆய்வு நூல்கள்.

கொள்வனவு விலையில் நூல்கள் விற்பனையாகும் ஒரேஒரு இடம்

**மக்கள் பிரசுராலயம்,**
**40, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

உ
சிவமயம்
நகுலேஸ்வரம், கீரிமலை
அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத
நகுலேஸ்வர ஆலய புரட்டாதி மாதம்
சனிக்கிழமை விரத

## விசேட சாந்தி ஹோமம்

சிவநேயச் செல்வர்காள்,

நிகழும் இரத்தாக்ஷி வருடம் புரட்டாதி மாசம்
கீழ்க்காணும் திகதியில்

**13–10–84இல் காலை 6 மணி தொடக்கம்**
நகுலேஸ்வர ஸ்வாமி கோவிலில்
எழுத்தருளியிருக்கும்
சனியேஸ்வரப் பெருமானுக்கும், நவக்கிரகத்திற்கும்
தெஷிணுமூர்த்திக்கும்
**விசேட சாந்தி, திரவிய ஹோமம்,**
**திலஹோமம், விசேட அபிஷேக ஆராதனைகள்**
வேதாகம முறைப்படி நடைபெறும்.


அடியார்கள் அனைவரும் கண்டகி தீர்த்தமாடி சங்கல்பித்து விரதமனுஷ்டித்து மேற்படி சாந்தி ஹோமங்களில் பங்கு பற்றி எள்தீபமேற்றி நவக்கிரக வழிபாட்டுடன் எம்பெருமானின் கிருபாகடாக்ஷத்தைப் பெற்றுய்வீர்களாக.

குறிப்பு:
மேற்படி சாந்தி ஹோமத்தில் சங்கல்பித்து பங்குபற்ற விரும்பும் அடியார்கள் தேவஸ்தான அலுவலகத்தில் தங்கள் பெயர் நஷத்திரத்தைப் பதிந்து பற்றுசீட்டு பெற்றுக்கொள்க.

★ விசேட போக்குவரத்துச் சேவை நடைபெறும் ★

கு. நகுலேஸ்வரக் குருக்கள்,
மேற்படி கோவில் ஆதீனகர்த்தா.
நகுலேஸ்வரம்,
கீரிமலை.
(138)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய
# அழைப்பு



யாழ். மாநகர முன்னுள் முதல்வர் எஸ். எஸ். நவரத்தினம் (மைனர்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இம்மாதம் 14-ந் திகதி கீரிமலையிலும், அன்னுரின் வீட்டுக்கிருத்தியம் இல. 23/24, கந்தையா வாத்தியார் வீதி, கந்தரோடை, சுன்னுகத்திலுள்ள இல்லத்தில் இம்மாதம் 15-ந் திகதி நடைபெறவுள்ளன. இவற்றில் கலந்துகொண்டு அன்னுரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றுர், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்னுரின் குடும்பத்தினர்.

கந்தரோடை, சுன்னுகம். (137)

# எல்சல்வடோர் அரசாங்கம்-இடதுசாரி கெரில்லாக்கள் திங்கள் சமரசப்பேச்சு!

## அமெரிக்க அரசாங்கம் வரவேற்பு!!

**சன்சல்வடோர், அக்.11**

**எதிர்வரும் திங்கட்கிழமை 15ம் திகதி எல்சல்வடோ அதிபர் திரு. நெப்போலியன் டுவாட்டோ தமது நாட்டின் இடதுசாரி கெரில்லாக்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். திரு. டுவாட்டேயின் இந்த நடவடிக்கையை அவரது அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் அமெரிக்காவும் வரவேற்றுள்ளது.**

திரு. டுவாட்டே எல்சல்வடோரின் இடதுசாரிக் கெரில்லாக்களைச் சந்திக்கவிருப்பதன் மூலம் அந்நாட்டின் நீண்டகால உள்நாட்டுக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டனர்.

திரு. டுவாட்டேயின் இடதுசாரித் தீவிரவாதிகளுடனான பேச்சுவார்த்தைகளில் கொலம்பிய நாட்டின் அதிபர் நடுநிலையாளராக இருப்பார். இப்பேச்சுக்களில் இரு தரப்பிலும் எல்சல்வடோர் பிரதிநிதிகளே முற்றிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவரென்றும், எந்தவொரு வெளிநாட்டுச் சக்திகளும் குறுக்கிட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் எல்சல்வடோர் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன், எல்சல்வடோர் அரசின் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சியைப் பெரிதும் வரவேற்றுள்ளார். தமது ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் மூலமாக இது குறித்து வாழ்த்துச்செய்தி ஒன்றையும் அதிபர் டுவாட்டேக்கு அனுப்பியுள்ளார்.

திரு.ஜோர்ஜ்ஷுல்ஸ் நேற்று திரு. டுவாட்டேயைச் சந்தித்துப் பல மணி நேரம் உரையாடினார். இடதுசாரிக் கெரில்லாக்களுடனான பேச்சுக்களில் சுமுக முடிவு காணப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இடதுசாரிகளுடனான பேச்சுக்களின்போது அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கப் படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அவர்களையும் எல்சல்வடோர் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளும் விடயங்கள் ஏற்கப் படமாட்டாதென்று கூறப்பட்டது.

ஜனாதிபதி டுவாட்டே கடந்த வாரம் ஐ.நா. சபையில் உரையாற்றியபோது, தமது அரசாங்கம் இடதுசாரித் தீவிரவாதிகளைச் சந்திக்கவிருப்பதை அங்கு தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. [க]

## பெய்ரூட்டில் ஸ்பெயின் தூதுவர் கடத்தப்பட்டார்!

### 3மணி நேரத்தில் விடுதலை!!

பெய்ரூட், அக்.11

லெபனானுக்கான ஸ்பெயின் தூதுவர் நேற்றுக் கடத்திச் செல்லப்பட்டார். ஆயினும் மூன்று மணி நேரத்தின் பின்னர் எவ்வித பாதிப்புமின்றி அவர் விடுதலையானார்.

மேற்கு பெய்ரூட்டிலுள்ள ஸ்பானிய தூதரக வாசஸ்தலத்தில்வைத்தே தூதுவர் கடத்தப்பட்டார். இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் இவரைக் கடத்திச்சென்றனர்.

விடுதலையான பின்னர் நிருபர்களிடம் ஸ்பானியத் தூதுவர் விளக்கமளிக்கையில், தம்மைக் கடத்திச் சென்றவர்கள் இரு இளைஞர்கள் என்றும் அவர்கள் தமது கண்களைத் துணியொன்றினால் கட்டிய பின்னரே கூட்டிச் சென்றனர் என்றும் குறிப்பிட்டார்.

அவ்விரு கடத்தல்காரர்களும் ஸ்பெயினில் சிறைவைக்கப்பட்டுள்ள தமது சகாக்களை விடுவிக்கவேண்டுமெனத் தூதுவரிடம் கோரியதாகவும் கூறப்பட்டது. [கி]

## அரங்கில் விபத்து ஒருவர் பலி 250 பேர் காயம்!

திருவந்தனபுரம், அக். 11

விளையாட்டரங்கின் பார்வையாளர் இருக்கைப் பகுதி ஒன்று முறிந்து வீழ்ந்ததால் ஒருவர் பலியானார். 250 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம் நகரில் இடம்பெற்றது இங்கு சந்திரசேகர் நாயர் விளையாட்டரங்கில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் பந்தயமொன்றின் போதே இவ்விபத்து நிகழ்ந்தது.

அளவுக்கு மீறிய பார்வையாளர்கள் அப்பலகை இருக்கைப் படிகளில்இருந்ததாலேயே அது விழுந்து முறியவேண்டியதாயிற்று என்று கூறப்பட்டது. காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. [கி]

## மானிப்பாயில் மறைக்கல்வி விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் புனிதஅன்னாள் ஆலய மறைக்கல்வி விழா கடந்த ஞாயிறன்றுபுனிதஅன்னாள் பாடசாலையில் சிறப்பாக நடந்தது இவ்விழாவை மானிப்பாய் பங்குத்தந்தை அருட்திரு கிறிஸ்தோப்பர் அடிகளார் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

அவர்ஆற்றிய ஆரம்ப உரையில், சிறுர்களின் மறைக்கல்வி வளர்ச்சி முழுமையாக பெற்றோரின் ஊக்குவிப்பிலேதான் தங்கியுள்ளது என்றார்.

இவ்விழாவில் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவர்களும் மறைக்கல்வி ஆசிரியர்களும், பெருந்திரளான பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

விழாவில் கிறிஸ்துவின் படைப்புக்களும். புதுமைகளும் உவமைகள் அடங்கிய நாடகங்களும் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

## நிர்வாகிகள் தேர்தல்

[கிளிநொச்சி]

இலங்கை தமிழாசிரியர் சங்க பரந்தன் கிளையின் நிர்வாகிகள் தேர்தல் பிரஸ்தாப சங்க நிதிச் செயலாளர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர்புதிய நிர்வாகிகளாகத் தெரிவானார்கள். தலைவர்:- வ. பசுபதி,செயலாளர்:-எஸ். கனகமகேந்திரா, பொருளாளர்:-பொன் தில்லைநாதன், உப தலைவர்கள்: எஸ், அரியரத்தினம் ம.பத்மநாதன் உப செயலாளர்கள்:எஸ் தர்மரத்தினம், க. சிவலிங்கம் 7 பேர் நிர்வாக சபைக்கும் தெரிவாகினார்கள்.

## ஆப்கான் அகதிகளுக்கு பிரிட்டன் கூடுதல் உதவி!

### 2.8 கோடி பவுண் ஒதுக்கப்பட்டுள்ளது!

லண்டன் அக். 11

பாகிஸ்தானில் இருக்கும் ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு 2 8 கோடி பவுண்கள் உதவியை பிரிட்டன் அளித்துள்ளது.

இப்பெருந் தொகை உதவி ஐ.நா. ஸ்தாபனத்தின் அகதிகளுக்கான பிரிவு மூலமாக ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு வழங்கப்படும். ஐ.நா. ஸ்தாபன அகதிகள் பிரிவு ஜெனீவாவில் இயங்கி வருகின்றது. இப்பிரிவின் கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரிட்டன் பிரதிநிதி மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இந்த உதவிப் பணத்தில் ஆப்கான் அகதிகளுக்கென 3 லட்சம் பவுண்கள் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும், 2 லட்சத்து 75 ஆயிரம் பவுண்கள் ஏனைய வைத்திய வசதிகளுக்கும், 75 ஆயிரம் பவுண்கள் ஐ. நா. சிறுவர் பிரிவு உதவித் திட்டத்தின் கீழ் ஆப்கான் சிறுவர்களுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியை அடுத்துள்ள பாகிஸ்தான் பகுதிகளில் சுமார் 30 லட்சம் ஆப்கான் அகதிகள் காணப்படுகின்றனர் இத்தொகை பொத்த ஆப்கான் குடித்தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும் ஆப்கானிஸ்தானில் கெரில்லாக்களுக்கும், அங்குள்ள சோவியத் துருப்புகளுக்குமிடையே இடம்பெறும் தொடர்ச்சியான மோதல்களையடுத்தே இவ்வளவு பெருந்தொகையில் ஆப்கான் வாசிகள் அகதிகளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## பட்டாசுக் கடையில் தீ! 6 பேர் பலி; 16 பேர் காயம்

சென்னை அக் 11

தமிழ் நாடு செங்கல்பட்டு பட்டாசுக் கடையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் 16 பேர் காயமடைந்தனர்

இத் தீவிபத்துநேற்று இடம் பெற்றது அப்பட்டாசுக் கடையின் வெளியே சில பட்டாசுப் பெட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றின் மீது வீதியில் சென்ற லொறி ஒன்றின் சக்கரம் ஏறியதனால் அப்பெட்டி வெடித்து அதிலிருந்தும் தீப்பொறி சிதறியது. இதனைத் தொடர்ந்தே அக்கடையினுள் இருந்த ஏனைய பட்டாசுப் பொதிகளும் வெடித்துப் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக செங்கல்பட்டு பொலிஸர் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென்று அறிவிக்கப்பட்டது [கி]


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605

### மணிவாக்கு

எவன் விஷத்தைக் கலக்குகிருனே அவன் அதைக் குடிக்கவும் செய்கிருன். —எகிப்திய பழமொழி

# நமது நோக்கு

## ஹாட்லியும் றோயலும்

றோயல் கல்லூரி உப அதிபராக இருந்த ஆங்கிலேயர் திரு. சாம்சனை அக்காலத்து மாணவன் கோமிஸ், ''சேர், கடந்த யுத்தத்தில் (முதலாவது உலக மகாயுத்தம்) நீங்கள் கழுதை வண்டி விட்டதாகச் சொல்கிருர்கள் மெய்யா!'' என்று கேட்டானும்.

மாணவன் துணிவைக் கிழித்தெறியும் பாங்கில் திரு. சாம்சன், ''ஆம் தம்பி, நான் இன்றும் அதேவேலையில் ஈடுபட்டிருக்கிறேன்'' என்ருராம்.

வைபிள் குறித்த எழுபது வயதைக் கடந்த 51 றோயல் கல்லூரி மாணவர்கள் கடந்த சனிக்கிழமை நடத்திய கொண்டாட்டத்தில் இச்சம்பாஷணை நினைவு கூரப்பட்டது.

நாட்டின் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன உட்பட இந்த மூதறிஞர் கூட்டம் தங்கள் கலைக்கோயிலின் பெருமை பேசி இன்புற்றதில் ஒரு பொல்லாப்புமில்லை.

சுதந்திர இலங்கைக்கு சுக்கான் பிடிப்பதுறோயலா அல்லது புனித தோமையரா என்ற போட்டி பேசப்பட்டதொரு காலம். இன்றைய பிரதமர் புனித சூசையப்பர் கல்லூரி பழைய மாணவர் என்றதால் அதற்கும் கடவுச்சீட்டுக் கிடைத்திருக்கின்றது

சாம்ராச்சிய ஆதிக்கத்தின் பிரதிபிம்பங்கள் இக்கல்லூரிகள் என்ற எதிர்ப்பு இயக்கத்தில் நாட்டின் தேசிய கல்லூரியெனக் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி பிரபலம் அடைந்ததும், அதன் பிரதிநிதி டாக்டர் என்.எம். பெரேராவின் நிதித்துவமும் கிரிக்கெட்டும் ஆனந்தாவின் பெருமைக்கு அழகு ஊட்டியது.

ஜனுதிபதியையும் பிரதமர்களையும் சிரேஷ்ட அமைச்சர்களையும் உற்பத்தி செய்த கல்லூரிகள் கல்வியின் அடிப்படையான பலவீனத்தைத் துலக்கவும் உதவின; அது என்ன?

வருடா வருடம் வடக்கிலிருந்து பல்கலைக்கழகத்தின் மருத்துவ, பொறியியல் பீடங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்கள் தொகை இதுவானுல் நாட்டின் ஏனைய பகுதிகளின் பாடென்ன?

'டெயிலி நியூஸ்' போன்ற கொழும்புப் பத்திரிகைளில் கொட்டை எழுத்தில் முதற் பக்கத்தில் பாடசாலைப் பெயர்கள், புள்ளி விபரங்கள் அதிர்ச்சிக் கேள்விகள் விளாசப்பட்டன. இதனுல் ஏற்பட்ட கொந்தளிப்பு; இதன் விளைவான தரப்படுத்தல் விகிதாசாரம் போன்ற பல அநீதிகள் உயர் நீதிமன்றங்களில் அலசப்பட்டன. பயனற்ற முயற்சிகள்.

''இந்த வழி நியாயமற்றதென்று எனக்குத் தென்பட்டாலும், இவ்வாறு ஒரு விகிதாசார முறையைக் கடைப்பிடிக்கச் சட்டம் இடங்கொடுக்கின்றது. சட்டத்தின் அநீதியை நீக்க எனக்கு அதிகாரமில்லை'' என்று ஒரு உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்று ஏட்டில் இடம் பெற்றிருக்கிறது.

வடக்கில் உயர் கல்வி செழித்திருந்தபோது பல்கலைக்கழகப் பிரவேசத்தில் முதல் இடம்பெறும் கல்லூரிகளில் ஹாட்லி ஒன்று. இன்றும் இந்த விகிதாசாரமுறையிலும் அது தலைநிமிர்ந்து நிற்பதானுல் நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு நேர்ந்த அதோகதியை விளக்குமளவிற்கு ஹாட்லியை நாம் ஆகுபெயராக இங்கு குறிப்பிட்டோம்.

இதனுல் எழுந்த குழப்பம் நாளடைவில் ஒரு தேசிய பிரச்னையானதை ஆட்சிக்கு வந்த அரசுகள் செவ்வனே புரிய முடியாததால் இன்றைய நிலை உருவானது இதனைத் தீர்க்க வல்ல தீர்க்க தரிசனமும் 'தசிய' தலைமையும், ''றோயல்'' கிரிக்கட்டிலும் அதுஊட்டி வந்த சாம்ராச்சிய மனப்போக்கிலும் உருப்படமாட்டாது. 'சமத்துவ சந்தர்ப்பம், வெறும் சொற்றெடர் அல்ல.

நாளாவிய பரந்த தேசிய போக்குத்தான் இந்த நெருக்கடிக்கு மிகஅவசியம். சமுதாய அநீதி, ஏற்றத்தாழ்வு, வறுமை, பசி பட்டினி வேலையில்லாமை போன்ற சமுதாய நோய்கள் சிலகாலம் 'கிறெனிக்' நிலையிலிருக்கலாம் சடுதியில் தீவிரமாகமாகலாம்.

இன்று அந்தநிலைவடக்கில் 'பயங்கரவாதம்' என்ற ரூபம் எடுத்திருக்கிறது. வடக்கில் இதனை ஒழித்துவிட்டால் இந்த நாட்டை ஆள்வதற்கு வேறெவருக்கும், எந்தக்கட்சிக்கும் இடமில்லை என்பது நனவாகலாம்.

ஆனுல் ஒழிப்பது எவ்வாறு? இன்று பந்தோபஸ்து அமைச்சரைச் சந்திக்கும் 'அதிபர்குழு' ஒரு குறிப்பிட்ட கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிறது; ஆனுல் பிரம்மாதமானகேள்வி இதில் பதுங்கியிருக்கிறது.

அந்தக் கோரிக்கையின் அடிப்படை விளக்கமும், அதன் பின்னணியுமே நாம் விமர்சிக்கும் விடயம்.

பல்லாயிரக்கணக்கான இப்பகுதி மாணவர்கள் இன்று பாதுகாப்பற்று, கல்வியை இழந்து பரிதவிக்கிருர்கள்; உண்ணுவிரதம் இருக்கின்றனர்; இவர்களின் பெற்றோர் உண்டு உடுத்து வாழ்கின்றனரா? இவர்ள் கையிலா இதற்கு பரிகாரம் உண்டு?

நீண்டகாலம் கோரிக்கை விட்டு மகஜர் சமர்ப்பித்து, எதிர்ப்பு, ஊர்வலம், ஆர்ப்பாட்டம் போன்ற பயனற்ற வழிகளில் காலங்கழித்த இளைஞர் இன்று வேறுவழிகளில் இறங்கி தங்கள் வருங்காலத்தை அடகு வைத்துவிட்டனர்; இதனை வீண் சூதாட்டம் என்று வர்ணிப்பது நியாயமா?

ஆரம்பத்தில் ஒரு ஆவேசவல்செயற் சவாலாகக் கருதப்பட்ட நிகழ்ச்சி இன்று இந்த நிலைக்குப் பெருத்துவிட்டது. இதனைத் தீர்த்து வைக்கும் சாமர்த்தியம் எங்கிருந்து வரும்?

ஒக்ஸ்போர்ட்டில் படித்து உயர்ந்த, பந்தோபஸ்து அமைச்சர் இதன் அடிப்படைக்காரணத்தை இனியாவது உணர இன்றைய சந்திப்பு உதவவேண்டும்.

அரசியல் ஞானம். அழிவிலிருந்தாவது பிறக்க வேண்டும்,

மக்கள் ஆதரவில் உருவான எதிர்ப்புக்கு ராணுவதீர்வென்பது நோயின் குணம் அறியாது செய்யப்படும் சத்திர சிகிச்சை போன்றது.

## அபிவிருத்தியின் குறிக்கோளும் எதிர்நோக்கும் பிரச்னைகளும்

### தி. வெற்றிவேலுப்பிள்ளை

உலகரீதியாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், அதன் பல்வேறு உபநிறுவனங்களும் பிரச்னைகளை அணுகி ஆராய்ந்ததன்விளைவாக அபிவிருத்தி பற்றிய உண்மை விளக்கம் மெல்லமெல்ல உருவாகிவந்துள்ளது எனலாம்.

குறிப்பாக யுனெஸ்கோ நிறுவனம் இதுபற்றி பலவகையான உலகளாவிய ஆய்வுகளை மேற்கொண்டதன் பயனுக 'அபிவிருத்தி'யின் பல்வேறு அம்சங்கள் தற்போது பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றன.

#### யுனெஸ்கோ அறிக்கை

உண்மையான அபிவிருத்தி பற்றி யுனெஸ்கோ அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகின்றது:-

''உலகரீதியாக கடந்த காலத்திலே பல்வேறுதிட்டங்களினதும் அனுபவங்களினதும் அடிப்படையில் அபிவிருத்தி கோட்பாடு குறித்து சிலசிறப்பியல்புகள் இப்பொழுது துலக்கமாகி வருகின்றன. இதில் முதலாவதாகவும் மிக முக்கியமானதாகவும் குறிப்பிடத்தக்கது யாதெனில் அபிவிருத்தி என்பது ஒருசமுதாயத்தின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களையும் சேர்த்திணைக்கும் பல தொடர்புகள் சார்ந்த செயல்முறையாகும். இவ் அபிவிருத்திச் செயல்முறை மனிதனால் திட்டமிட்டுச் செயற்படுத்தப் படுகின்றது ஆரம்பம் முதல் முடிவுவரை இச்செயல்முறை மனித நலம் பேணுவதாய், மனித நலத்திற்குரித்தாக வேண்டும். அதாவது அபிவிருத்திக்கு நடுநாயகமாக மனிதன் இருத்தல் அவசியம் என்னும் பொருளிலேயே இன்று இச் செயல்முறையை நாம புரிந்து கொள்ளவேண்டும். இதன் தாற்பரியம் இப்பொழுதே தெளிவாகிவருகிறது''

#### அபிவிருத்தி என்றுல்என்ன?

அபிவிருத்தி என்பதுவெறு மனே சிற்சில மூலவளங்களை வெளிப்படுத்தி அவற்றை உற்பத்திசெய்து பெருக்குவது மட்டுமல்ல, அதனுல் சமூகத்திற்கு நன்மை ஏற்படும் என்று கருதி செயல்படவேண்டும்.

அபிவிருத்தியின் போது சமூக உறவுகளையும், சமூக நலன்களையும் நீதியான முறையில் வகுத்துக்கொள்ளவும், பகிர்ந்துகொள்ளவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும். நாட்டு மக்களுக்கிடையிலும், ஏனைய உலகநாடுகளுடனும் நீதியான உறவுகளை வளர்த்துக்கொள்ளத்தக்க அடிப்படைகளை உருவாக்குவதாக அபிவிருத்தி அமையவேண்டும்.

தனிமனித சலுகைகளும், விசேட உரிமைகளும் இருக்கும் சூழ்நிலையில் உண்மையான அபிவிருத்தி ஒருநாட்டில் ஏற்படஇயலாது.

#### அபிவிருத்தியின் குறிக்கோள்

யுனெஸ்கோ தீர்மானங்கள் அடிக்கடி கூறுவதுபோல்:- ''அபிவிருத்தியின் குறிக்கோள் உண்மையான அறிவியல், பொருளியல் முன்னேற்றமாக அமைதல்வேண்டும். தனிமனிதன் என்றமுறையிலும், சமூகத்தில் ஓர் உறுப்பினன் என்ற வகையிலும் ஒருவனுக்கு திருப்தியும், நிறைவுணர்ச்சியும் அபிவிருத்தியினுல் ஏற்படவேண்டும்.''

அபிவிருத்தியின் பெயரில் அதீத கட்டுப்பாடுகளையும், மக்களுக்குப் பழக்கமில்லாத அந்நிய முறைகளையும், ஒழுக்கங்களையும் அறிமுகப் படுத்துவது தவிர்க்கப்படல் வேண்டும்.

பொருளாதார பெருக்கம் என்ற குறுகிய நோக்கமுடையவர்களே அபிவிருத்திக்க கஅந்நியநிதி உதவிகளையும், தொழில் நுட்ப முறைகளையும் பெருமளவில் வருவித்துக் கொள்கின்றனர்.

உண்மையில் அபிவிருத்தியின் வெற்றி ஒரு நாட்டு மக்களிலேயே தங்கியுள்ளது அந்நிய உதவியும் இறக்குமதியும் மாத்திரம் அபிவிருத்தியைஏற்படுத்தாது.

#### அபிவிருத்தியில் மக்கள் பங்கு

அபிவிருத்தியில் மக்களின் திட சங்கற்பம், பங்குபற்றல் உழைப்பு ஒன்று சேரும் போதே அது சாத்தியமாகும் மக்களின் உள்ளார்ந்த சக்தி அங்கு முழு அளவில் வெளிப்படல்வேண்டும். நவீன மயமாக்கத்துக்கான பயிற்சி, அணுகுமுறை, ஏற்புடமை என்பனவந்து அடைந்தாலன்றி மக்களின் பங்களிப்பு தேவையான அளவில் அபிவிருத்திக்கு கிடைக்காது.

தனிமனிதனின் முயற்சி, பிரயாசை என்பனவற்றைப் பொறுத்தே அபிவிருத்தியின் வெற்றிதோல்வி அமையும். இன்றைய உலகிலே அபிவிருத்தியை தனியொரு நாட்டு பிரச்னையாக மாத்திரம் கருதவியலாது. சர்வதேச சூழ்நிலையிலேயே அதனைநோக்கவேண்டியுள்ளது. ஏனெனில் எந்தவொருநாட்டின் அபிவிருத்தியையும் நேரடியாகவும், மறைமுகமாகவும் சர்வதேச நிலைமைகள், பொருளாதாரப் போக்குகள் பாதிக்கின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்திகுன்றிய நாடுகள் என்றபாகுபாடும், கைத்தொழில்மயநாடுகள், பின்தங்கிய நாடுகள் என்றவார்த்தைப்பிரயோகமும் அபிவிருத்தியை அளவு கோலாகக் கொண்டவை என்பது வெளிப்படை.

#### அபிவிருத்தி கொள்கை

ஆனுல் அதற்குமேலாக அபிவிருத்திக் கொள்கை இன்று உலகிலே பல ஆய்வாளர்கள ல் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான வளர்முக நாடுகள் இப்பொழுது அபிவிருத்திக் கொள்கைகுறித்து ஆழமான மதிப்பீடுகளை ஆரம்பித்துள்ளன.

உலகிலுள்ள பல்வேறு கலாசார அமைப்புக்களும், அபிவிருத்தி மார்க்கங்களும் மதிப்புக் கொடுப்பதின் மூலமே அபிவிருத்திக்கு உயிரூட்டலாம் என்பதுநிருபனமாகிவருகிறது. இன்று ஒரு நாட்டிலுள்ள மக்கள் தமதுகலாசார, சமூகவளங்களைப் பற்றி அதிகமாக உணர்ந்து வருகின்றனர். கல்விமுறைகளின் வளர்ச்சியும், ஜனநாயக அமைப்பின் விளைவுகளும் இவ்உணர்வுக்கு உத்வேகம் ஊட்டிவருகின்றன. செல்வத்தையும், வறுமையையும் பணத்தால் மட்டும் அளவிடமுடியாதென நாட்டுமக்கள் கருதமுற்பட்டனர்.

வளர்ச்சியுற்றனவாகக் கருதப்படும் கைத்தொழில்மய நாடுகள் பலவற்றிலே நாகரி

(5-ம் பக்கம் பார்க்க)

### வெள்ளிச்சிந்தனை

## பிராயச்சித்தம்

செய்த தவறு ஒன்று வெளிப்பட்டதும் மன்னிப்புக் கேட்பதும், ஒருவர் நன்மை செய்தபோது நன்றி சொல்வதும் இக்காலத்தில் வெகு சாதாரணம். இது ஒரு நாகரீகச் செய்கையாகும். ஆனுல், மன்னிப்புக் கேட்டவுடன் தவறு சரியாக மாறிவிடாது—நன்றி சொன்ன அளவில் நன்மைக்கு அது பதிலாய் விடாது. தான்செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டவன் தன்னை மன்னித்தவனுக்கு உகந்த செய்கைகளையோ அல்லது தனது தவறினுல் அவனுக்கு உண்டான நட்டத்தை ப்போக்கும் செய்கைகளையோ செய்வதவசியம். இப்படிச் செய்யும்போதுதான் மன்னிப்புக்கேட்டதற்கு அர்த்தம் இருக்கும். இதேபோல ஒருவன் நன்மை செய்தபோது நன்றி கூறியதனேடு திருப்தியடைவது தவறு. செய்நன்றிமறவாமையாகிய பண்பை—அவர் தெரிந்தோ தெரியாமலோ தீமைசெய்தபோதும் வெளிப்படுத்துவதே— வெளிப்படுத்த முயல்வதே ஒருவர் செய்த நன்மைக்கு நன்றி கூறுவதன் செயற்பாடாய் இருக்கவேண்டும்.

நாம் செய்த தீவினைகளையும் அவற்றுல் உண்டாககூடிய துன்பங்களையும் நம் சாதகவாயிலாகக் கிரகங்கள் உணர்த்தும்போது, கிரக வழிபாடு செய்தஅளவில் அக்கிரகங்கள் நன்மை புரிந்துவிடும் எனக் கருதுதலாகாது பெரியோர்—பெற்றுர் முதலியவர்களின் மனம்நோக நடத்தல்—பிற உயிர்களைத் துன்புறுத்தி மகிழ்தல்—தனக்கென உரிய கடமையைப் புறக்கணித்தல்—பிறர் நன்மை செய்யும்போது தடுத்தல்—பிறர்நல்லாய் இருத்தலையும், புண்ணியம் செய்தலையும் கண்டு பொறுமைகொள்ளல் முதலிய தீவினைகளையும் செய்திருந்தாலே சனீஸ்வரன் முதலிய கிரகங்கள் நமதுசாதகத்தில் துன்பம் உண்டுபண்ணும் இடங்களில் இருந்து துன்பத்தை உண்டுபண்ணும். இப்படியான சந்தர்ப்பத்தில் சனிபகவானுல் துன்புறும் ஒருவர் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விரதமிருந்து எள்ளெண்ணைஎரித்துக் காகத்திற்கு சோறிட்டு உண்பதால் மட்டும் துன்பங்கள் முற்றுய் நீங்கிவிடாது.

கிரகதோஷத்தால் துன்புறும் ஒருவன் தனக்குத் தோஷமான பலனைச் செய்யும் கிரகத்தை வழிபடுவதோடு அக்கிரகம் பிரீதிஅடையத்தக்கதான பண்புகளை வளர்த்தல் வேண்டும். தனங்குத் துன்பம் வருவதற்குத் தான்முன்செய்த தீவினையே காரணம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தனக்கு துன்பம் செய்பவர்களையும் தன் சாதகத்தில் துன்பத்தை உண்டு பண்ணும் கிரகத்தையும் வெறுக்காது வாழப்பழகவேண்டும்.

தெய்வபக்தியில் உறுதியான மனமும், தர்மசிந்தனையும் உடைய தூயவர்களுக்கு கிரகங்கள் குறைவாகவே தாக்கும் திருநாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த உணவு கிடைத்ததும், சம்பந்த சுவாமிகள் தங்கியிருந்த மடத்தில் நெருப்பு வைக்

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில்

# கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை திருப்பித் தந்துதவவும்

### அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ் வேம்படி மகளீர் கல்லூரியில் கொள்ளையடிக்கப்பட்ட டெக்கையும், கசெட்டையும் கல்லூரியின் நன்மைகருதி திருப்பித்தந்துதவவும் இப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டமை கல்லூரிக்கும், மாணவர்களுக்கும் பேரிழப்பாகும்.''

இவ்வாறு யாழ் வேம்படி மகளிர்கல்லூரி அதிபர் திமதி அ. இராஜரத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக் கோரிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

''காட்சிமூலம் விஞ்ஞானப் பாடங்களை சுலபமாக கற்றுக் கொள்ளும் இவ் வசதியில்லாமல் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரிதும் அல்லல் உறுகின்றனர்.

''இவ்வருடம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இது பெரிதும் கவலையைத்தருகின்றது. எதிர்கால மாணவசமுதாயத்தின் கல்வியில் பெரிதும் அக்கறை கொண்டுள்ளவர்கள் பாடங்கள் பதிவுசெய்யப்பட்ட நாடாக்கள் பெறற்கரும்பொக்கிஷங்கள் என்பதை அறிவார்கள். அவர்களுக்கு எவ்வகையிலும் பிரயோசனப்படாத இவற்றை, மாணவர்பயனுறும் வண்ணம் தந்துதவினால் வேம்படிமகளிர் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் மகிழ்ச்சியடைவர்.

(வெ)

## கிளிநொச்சி, திருமலை

# மாவட்டங்கள் உலகவங்கி உதவியுடன் அபிவிருத்தி

### நிபுணர்குழு இறுதி ஆய்வுக்கு வருகிறது

(கொழும்பு)

உலகவங்கியின் உதவியுடன் கிராமிய ஒருங்கிணைப்புத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, திருமலை மாவட்டங்கள் அடுத்தாண்டில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன

இத்தகவலை கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தித்திட்ட இணைப்பாளரும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளருமான கலாநிதி ஏ.எஸ் குணசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் 42 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட இருக்கும் இந்த திட்டத்தின்மூலம் நீர்ப்பாசனம், விவசாயம், கல்வி சுகாதாரம். கிராமிய மின்சாரம், வீதிபுனரமைப்பு ஆகியதுறைகள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

திருகோணமலை மாவட்டம் 35 கோடி ரூபா செலவில் அபிவிருத்திசெய்யப்பட உள்ளது. மேற் சொன்ன அபிவிருத்தி வேலைகளுடன் திருமலையில் மீன்பிடித் துறையும் அபிவிருத்தி செய்யப்பட உள்ளது. இத்திட்டங்கள் தொடர்பாக நேரில் ஆராய்வதற்காக இலங்கை வந்திருந்த உலகவங்கி நிபுணர்கள் குழு இதற்கான நகல்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இதுகுறித்து ஆய்வுகளை நடாத்தும் பொருட்டு எதிர்வரும் மார்ச் மாதமளவில் உலகவங்கியின் மற்றுமொருகுழுஇலங்கைவருகிறது

இவ்விரு திட்டத்திற்கான வேலைகளும் அடுத்தாண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்று கலாநிதி குணசிங்கம் தெரிவித்தார்.

## "உயிர், உடமைகளைப் பாதுகாக்க

# மக்கள் அமைப்புக்களை உடன் உருவாக்கவேண்டும்!"

### கம்யூனிஸ்ட் கட்சி யாழ். குழு அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''தமிழர் பிரச்னைக்கு சர்வகட்சி மகாநாட்டின் மூலம் தீர்வு காணப்படும் என்று உறுதியளித்த இந்த அரசாங்கம் தனது வாக்குறுதியை குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டு தனது பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்குஎதிராக யுத்தத்தை ஆரம்பித்துள்ளது.'

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்.மாவட்டக் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட குழு செயலாளர் திரு. பொன் குமாரசாமி கையெழுத்திட்டு விடுத்துள்ள இவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- இலங்கைத் தமிழ் மக்களுக்கெதிராக பாரபட்சம் காட்டப்பட்டது உண்மையே என்று யூ. என். பி. தனது 1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்திலும், முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் ஏற்றுக் கொண்டது சகலரும் அறிந்ததே. அவற்றில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீ களை இனங்கண்டு குறிப்பிட்டிருந்ததும் தெரிந்ததே அவையாவன வேலைவாய்ப்பு,கல்வி, கற்பதற்கான வசதிகள் தமிழ் மொழிக்குரிய இடம், தமிழ் பிரதேசங்களில் குடியேற்றம் என நால்வகைப்படும் என்றும், குறிப்பிடப்பட்டிருந்தது மேலும் இப்பிரச்னைகளுக்கு சர்வகட்சி மகாநாட்டின் மூலம் தீர்வு காணப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. நடந்தது என்ன?

அரசு நடத்தும் யுத்தத்தினால் பாதிப்படைபவர்கள் யார்? தீவிரவாதிகளா அல்லது அப்பாவித் தமிழ் பொது மக்களா? அப்பாவி மக்கள் என்பதை சகலரும் அறிவர்.

வடமராட்சி போன்ற பல இடங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அப்பாவி மாணவர்கள் கைது செய்யப்பட்டு பெற்றுருக்கோ பாடசாலை அதிபர்களுக்கோ எவ்வித அறிவித்தலுமின்றி எங்கேயோ எல்லாம் விசாரணையின் பேரில் கொண்டு செல்லப் படுகின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞர்களிற் பலர் எங்கே வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவலை அரசு பெற்றுருக்குக் கொடுத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்து என்று ஏங்கித் தவிக்கின்றனர் பெற்றுர்.

எத்தனையோ அப்பாவிப் பொது மக்கள் வீடுகளிலும் வீதிகளிலும், வேலைத்தலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி வருகின்றனர், தாக்குதல்களுக்குஅஞ்சி தொழிலாளர்களும் விவசாயிகளும் மீனவர்களும், மற்றும் வியாபாரிகளும் தமது வேலைகளையெல்லாம் கைவிட்டு, வாழவழியற்றுக் கலங்குகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் ஒரு உறுதியான முடிவிற்கு வந்தாக வேண்டும்.

இதனை உறுதிப் பண்ணும் வகையில் மக்களுக்கு கைகொடுத்துதவ எந்த ஒரு பாரம்பரிய அமைப்பும் எம் மத்தியில் இல்லை. எனவே தமது உயிரையும் உடமைகளையும் தாமே பாதுகாத்துக் கொள்ளவும் தாக்கப்பட்டவர்களுக்கு உடன் நிவாரணங்கள் அளிக்கவும் ஒவ்வொரு உப அரசாங்க அதிபர் பிரிவிலும் ஓர் பிரஜைகள் குழு போன்ற மக்கள் அமைப்புகளை உடன் உருவாக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இநத 'யுத்த' நிலை தொடரும் பட்சத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு பற்றுக்குறை எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றுகின்றன. எனவே இந்தப் பிரசைகள் குழுக்களின் மூலம் தேவையான பொருட்களைப் பொது மக்கள் உற்பத்தி செய்ய உடன் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் எனவும் ஒவ்வொரு குளி நிலமும் பயிரிடப்பட வேண்டும்மென்றுப் கம்யூ கட்சியின் யாழ் மாவட்டக் குழு சகலரையும் வேண்டுகின்றது.

## அபிவிருத்தி...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

கத்தின் அடிப்படைகளே ஆட்டங்காணும் வகையில் மனிதப் பண்பு நலிவுறுவதைக் காணும் வளர்முக நாடுகளிலுள்ள மக்கள், அம்மேற்கு நாடுகளுன் வளர்ச்சி பாதைகளையும் அபிவிருத்தி மாதிரிகளையும் அவநம்பிக்கையுடன் நோக்குவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

ஒரு சமூகத்தின் அபிவிருத்தியை நசுக்கி, இன்னொரு சமூகத்தை அபிவிருத்தியடையச் செய்வதின் மூலம் நாட்டில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியாது.

## வல்வை பொலிஸ் நிலையத்துக்கு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுதிருக்கும் பொலிஸ் நிலையம் 5 ஏக்கர் நிலத்தில் இருந்தும், மேலும் காணிகள் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று பிரஜைகள் குழு, இணைப்பதிகாரிக்குத் தெரிவித்ததுடன், காணிகள் மேலும் சுவீகரிக்கப்படுமானல் 419 பேரைக்கொண்ட 62 குடும்பங்கள் குடிமனையில்லாமல் தவிக்க வேண்டியநிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியது

பாதுகாப்புப்படை மேலும் விஸ்தரிக்கப்படுமானல் கொத்தனிப்பாடசாலையாக இருக்கும் சிதம்பராக் கல்லூரிக்கு மாணவர்கள் வருகை குறைவதுடன் கல்வி பாதிக்கப்படும் என்றும் ஹாட்லிக் கல்லூரிக்கு ஏற்பட்டநிலை இதற்கும் நிகழலாம் என்றும் பிரஜைகள்குழு, இணைப்பதிகாரிக்கு தெரியப்படுத்தியதாகவும் குழுப்பிரதிநிதி ஒருவர் சொன்னர்.

இணைப்பதிகாரி இவற்றையெல்லாம் தாம் கவனத்தில் கொண்டுள்ளதாகவும், வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்ததாக பிரஜைகள்குழு அறிவித்துள்ளது.

[மா]

## சிவிலுடையில்...

(1ம பக்கத் தொடர்ச்சி)

ளாலும், ஆயுதங்களாலும் அவ்விடத்தில் நின்ற மின்சாரப்பகுதி ஊழியர்கள் உட்பட பலரைத் தாக்கியதாகவும்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலால் மின்சாரப் பகுதி ஊழியர்களான பாலசுப்பிரமணியம், விசுவநாதன், சின்னராசா, தேவராசா, தனேந்திரன் ஆகியோர் பாதிக்கப்பட்டதாகக்கூறப்படுகிறது.

இத்தாக்குதலின்போது ஒரு ஊழியரின் கைக்கடிகாரமும் காணுமல்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது

## ஈழநாடு ஊழியர் தாக்கப்பட்டார்

'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்தில் அச்சுக்கோப்பாளராகக் கடமையாற்றும் ஊழியர் ஒருவரும் நேற்றுநண்பகல் பலத்த தாக்குதலுக்குள்ளாகி, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கொக்குவிலைச் சேர்ந்த எஸ் ரவீந்திரன் (29 வயது) என்ற இந்த ஊழியர் தாக்கப்பட்டது தொடர்பாகப் பொதுமுகாமையாளர் யாழ். அரசாங்க அதிபருக்குப் புகார் செய்துள்ளார்

நேற்று நண்பகல் அலுவலகத்திலிருந்து மதிய உணவு உண்ணச் சென்றுவிட்டு வேலைக்குத் திரும்பிவந்தசமயமே இவர் தாக்கப்பட்டதாகவும், அவ்விடத்தில் நின்றவர்களால் தனியார் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதித்துள்ளதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(மா)

## 'சிவா' நாளை உரையாற்றுகிறார்

(யாழ்ப்பாணம்)

''இன்றைய அரசியல் நிலையில் தமிழ்மக்களின் பங்கு'' குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், கூட்டணிப் பிரமுகர்கள் மத்தியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உரைநிகழ்த்தவுள்ளார்.

திருநெல்வேலியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்திலேயே திரு சிவசிதம்பரம் உரைநிகழ்த்தவுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்தமுன்னுள் எம். பி.க்கள், மாவட்டசபை, மாநகரசபை, நகரசபை, அபிவிருத்திசபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(மா)

## மண்டைதீவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டனராம்.

இதனுல் இந்த இளைஞர்களின் தாய்மார் கூட்டமாக அணிதிரண்டு இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்ட துறைமுகத்துக்குச் சென்று இராணுவ அதிகாரிகளின் முன் கதறி அழுதனர்.

சகல இளைஞர்களையும் துருவித் துருவி விசாரித்த இராணுவத்தினர் சில மணி நேரத்தில் அவர்களை விடுதலைசெய்தனர்.

இந்தச் சோதனையின்போது கடற்கரையில் உரிமைகோரப்படாது விடப்பட்ட இரண்டு இயந்திரப்படகுகளையும் இராணுவத்தினர் எடுத்துச்சென்றதாகக் கூறப்படுகிறது.

சுமார் 500 இராணுவத்தினர் இச்சோதனையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (சூ)

## ஜீப் கடத்தப்பட்டது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கரித்துச்செல்லப்பட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த ஜீப்பை கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடியில் வைத்துமோட்டார்சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் தடுத்து நிறுத்த முயன்றதாகவும் சாரதி நிறுத்தாமல் ஓட்டிவந்து அலுவலகத்தின் அருகில் நிறுத்திய சமயம் பின்னல் துரத்திவந்த இளைஞர்கள் சாரதி குட்டிப்பிள்ளை தில்லையம்பலம் என்பவரைப் பயமுறுத்தி ஜீப்பைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகின்றது

இச்சம்பவம்பற்றி கிளிநொச்சிப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

## வெள்ளிச்சிந்தனை

[4ம் பக்கத் தொடர்ச்சி)

கட்பட்டதும் தீயகிரகங்களின் அமைப்பா வே இருந்தாலும், அத்துன்பங்கள் அவர்களுக்கு எவ்வித ஊறுபாடும் செய்யாமை, தர்மசிந்தை, தெய்வ வழிபாட்டில் உறுதி என்பனவற்றின் சிறப்பை உணர்த்துகின்ற நல்ல உதாரணங்களாகும்.

அவ்வினைக் கிவ்வினையா மென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது
உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல்
போற்றுதும்நாம் அடியோம்
செய்வினை வந்தெம்மைத்
தீண்டப்பெரு திரு நீலகண்டம்.

திருஞானசம்பந்தர்

—அருளாளன்

## அகில இலங்கை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களுக்கும் அதே புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இதனுல் சுற்று நிருபங்களையும், புத்தகங்களையும், யாழ். மாவட்டத்திலுள்ள அதிபர்கள் வாசித்தறிந்து கொள்வது மிகவும் கஷ்டமாக இருப்பதாகக் கவலைதெரிவிக்கப்பட்டதுடன், மூன்று மொழிகளிலும் அவை அச்சிடப்பட்டிருந்தால் இலகுவாக அறிந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். என்று கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது வேண்டுமென்றே எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும் என்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது. (மா)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோகம்

# பம்பாயில் பட்டினி கிடந்த 40 பெண்களும் வந்தனர்!

(மன்னார்)

வெளிநாடுகளில் வேலை பெற்றுத்தரும் உள்ளூர் ஏஜன்சி ஒருவர் பம்பாயில் வைத்து பொலிசாரினால் கைது செய்யப்பட்டதால் வெளிநாடுகளில் வேலை தேடிச் சென்ற 40 இலங்கைப் பெண்கள் பம்பாயிலிருந்து மீண்டும் இலங்கைக்கே திரும்பி வந்தனர்.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் வெளிநாடுகளில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறிய பொரளையைச் சேர்ந்த ஒருவர் இலங்கையிலிருந்து 40 பெண்களை அழைத்துக் கொண்டு பம்பாய்க்குச் சென்றார்.

இவருடன் இவரது செயலாளர் எனக் கூறப்படும் ஒருவரும் பம்பாய்க்குச் சென்றிருந்தார்.

நாற்பது பெண்களுடன் பம்பாய்க்குச் சென்ற பொரளையைச் சேர்ந்தவர் ஏதோ ஒரு குற்றத்திற்காக பம்பாய் பொலிசார் கைது செய்து விளக்க மறியலில் வைத்தார்

இதனால் இவருடன் சென்ற 40 இலங்கைப் பெண்களும் வெளிநாடு செல்லமுடியாது பம்பாயில்தவித்தனர். இவர்களிடம் பணம் இல்லாததால் செயலாளர் தன்னிடமிருந்த சடிகாரம் போன்றவற்றை விற்பனை செய்து 40 பெண்களுக்கும் உணவளித்து வந்தார்.

சிலநாட்களின்பின் ஏஜன்சியின் செயலாளரும் பம்பாய் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

இதனால் இவர்களுடன் சென்ற 40 பெண்களும் சாப்பாட்டிற்குக்கூட பணமில்லாததால் பல நாட்கள் பட்டினி கிடந்தார்கள்.

இவர்களது அவஸ்தையைக் கண்ட பம்பாயிலுள்ள பௌத்த விகாரை அதிபதி ஒருவர் பல பொது நல ஸ்தாபனங்களினதும் இலங்கை தூதராலயத்தின் உதவியுடனும் 40 பெண்களுக்கும் உணவளித்து சில நாட்களின் பின் இலங்கைக்கே திருப்பி அனுப்பி வைத்தார்.

இவர்கள் தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இலங்கைக்கு வந்தனர். இவர்கள்கொழும்பு, மடவெல தெல்தெனிய, கண்டி, வந்தேகம, வெள்ளவத்தை, கம்பகா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாகும்.

இவர்கள் ஒவ்வொருவரும் வெளிநாட்டில் வேலைபெற்றுக் கொள்வதற்காக தலா 8 ஆயிரம் ரூபா வீதம் 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை பொரளை ஏஜென்சிக்கு செலுத்நியதாகவும் பலர் வட்டிக்குப் பணம் பெற்றே ஏஜென்சிக்கு கொடுத்ததாகவும் இக்கடனை எப்படி தீர்ப்போம் எனவும் அழுத வண்ணம் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

# வீடமைப்பு வேலைகளுக்கு நடமாடும் சேவை நிலையம்!

[மாவிட்டபுரம்]

பத்து லட்சம் வீடமைக்கும் வேலைகளைத் துரிதமாகச்செயல்படுத்த நடமாடும் சேவை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ள யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பரீட்சார்த்தமாக வலி-வடக்கில் செயல்படுத்தியது.

யாழ். மாவட்ட தேசிய அபிவிருத்தி அதிகார சபை பத்து லட்சம் வீடமைக்கும் திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நடமாடும் சேவைப் பிரிவை இயக்கி அதன்மூலம் பொது மக்களுக்கு உதவத் திட்டம் வகுத்துள்ளது.

மேற்படி திட்டத்தை முதற் தடவையாக வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பரீட்சார்த்தமாகச் செயல்படுத்தியபோது பெரு வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய முகாமையாளர் திரு. பி. இராமநாதன், மேலதிக முகாமையாளர் திரு. மூ. முருகையா, உதவி முகாமையாளர் திரு. செல்வராசா ஆகியோர் சமுகமளித்த மேற்படி நடமாடும் பிரிவினர் வலி-வடக்கில் வீடமைப்புக்கு விண்ணப்பித்தவர்களை அழைத்து விசாரித்து உடனடியாகக் காசோலைகள் வழங்கினர்கள்.

மேற்படி பிரிவில் வலி-வடக்கு விசேட சேவைகள் அலுவலர்களுடன் இணைந்து சில பகுதிகளுக்குச் சென்று நேரடியாக வீடமைப்பு வேலைகளைப் பார்வையிட்டு, குறிப்பிட்டவர்களுக்கு உடனடியாகவே காசோலைகள் வழங்கப்பட்டன.

★ மட்டு.கல்வித்திணைக்கள கடன்வழங்கல் சபை

# இலங்கை தமிழாசிரிய சங்க வேட்பாளரை எதிர்த்து 4 பேர் சுயேட்சைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்வித் திணைக்கள கடன்வழங்கும் சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேட்பாளர்கள் 17பேரை எதிர்த்து இரு முஸ்லீம்கள் ஒரு சிங்களவர் உட்பட 4பேர் சுயேட்சையாக தமது வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் அண்மையில் கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ரி. டி. ஹஸன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது.

21 உறுப்பினர்களைகொண்ட இச் சபையில் ஸ்ரீலங்கா கல்விச்சேவைக்குரிய ஆசனத்திற்கு கல்வி அதிகாரி திரு. சீ. மனோகரன் போட்டியின்றி மீண்டும்தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லிகிதர் சேவையும் அதனை சார்ந்த சேவைக்கும் கல்வித் திணைக்கள களஞ்சிய காப்பாளர் திரு எஸ். சேதுகாவலர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். சிற்றூழியர் தரத்திற்குரிய இரு ஆசனத்தை கைபபற்ற சபை முன்னாள் உறுப்பினர் திரு கே. சிவப்பிரகாசம் உட்பட திருவாளர்கள் வே கிருஷ்ணபிள்ளை, ஏ. பஞ்சாட்சரம், என். பத்மநாதன் ஆகிய நால்வர் போட்டியிடுகிறார்கள்.

ஆசிரியர்களுக்குரிய/ 17 ஆசனத்தை கைப்பற்ற இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் 4 சுயேட்சைகள் போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்கள் விபரம் வருமாறு: திருவாளர்கள் கே. நடராசா, எஸ். செல்வநாயகம், ஆர். பி. மரியதாஸ், பொ. தெய்வேந்திரா, பி. இராமலிங்கம், ஆகிய முன்னாள் உறுப்பினர்கள் உட்பட திருமதி எஸ். கனகசபை, திருமதி எல். சாமித்தம்பி' திருவாளர்கள் பி. கோவிந்தசாமி, எம். மகாலிங்கசிவம், எஸ் பூபாலரெத்தினம், எஸ். செல்லையா, எஸ். தங்கராசா, ரி. சுந்தரலிங்கம், எஸ். சண்முகம், ரி. பரசுராமபிள்ளை, கே. விஜயரெத்தினம் ஆகியோருடன் பின்வருவோர் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்கள். திரு. இ. தர்மலிங்கம், ஜனாப் எஸ்.எச்.ஜே. உசைன், திரு. ஏ. பி. சோமரத்தின, ஜனாப் ஏ.எம்.எஸ். மொகமட் ஆகியோராவர்.

இதற்கான தேர்தல் எதிர்வரும் 27ம் திகதி நடைபெறும்.

# புனர்வாழ்வு பயிற்சித் திட்டம்

(கிளிநொச்சி)

கடந்த ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின்போது இடம்பெயர்ந்த இளைஞர்களுக்கான புனர்வாழ்வுப் பயிற்சித் திட்டமொன்றை அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி, பரந்தன் றோட்டறிக் கழகத்தினர் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன் முன்னோடி நடவடிக்கையாக மின் ஒட்டுப்பயிற்சி நிலையம் ஒன்றை இவ் அமைப்புக்கள் பரந்தனில் நிறுவியுள்ளது.

இது தொடர்பாக அகதி முகாம்களும், முகாங்களுக்கு வெளியேயும் வாழுகின்ற 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இம்மாதம் 16-ந் திகதிக்கு முன்பாக றோட்டறிக் கழகத் தலைவர் ப. வை. ஜெயபாலனுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

# யாழ்.இந்து சாரணர் குழு நூல்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சாரணர் வாரத்தை கொண்டாடும் யாழ்.இந்துக் கல்லூரி சாரணர் குழு அயலவர் தினத்தை கொண்டாடியது. வழமைபோல சாரணர்கள் அணி அணியாகச் சென்று தாங்கள் செய்யும் வேலைக்கு வேதனமாக நூல்களைச் சேகரித்து ஹாட்லிக் கல்லூரி நூலகத்திற்கு வழங்குகின்றார்கள்.

சாரணர்கள் களியாட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து காலத்தின் தேவை நோக்கி சாரணிய சித்தாந்தத்தினின்று விலகாமல் தமதுசேவையை ஆற்ற வேண்டும். சமூகத்தின் தேவையை உணர்ந்து செயலாற்றி ஆறுதல் அளிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய யாழ் இந்து சாரணர் குழுத் தலைவர் பொது மக்களும் இவ்வாறான செயற்பாட்டிற்கு உதவ வேண்டும்மென்றும் இப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றுங் கூறினார்.

# மகாவலித் திட்டத்தில் 10 லட்சம் ஏக்கர் காடுகள் அழிப்பு!

(கோண்டாவில்)

எமது நாட்டிலுள்ள மரங்கள் யாவும் நாளாந்தம் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றுக்குப் பிரதி ஈடாக புதிய மரங்களை நாட்டுவதில்லை. இதன் காரணமாக எமது இயற்கையை அழித்து பொருளாதரத்தில் பின் தள்ளப்படுகின்ற நிலைக்கு உள்ளாவதுடன் சூழலும் பாதிப்படையக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு எஸ். பாலச்சந்திரன் குறிப்பிட்டார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சூழல்தினம் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்துபேசிய அவர் ''எமது நிலப்பரப்பு பதினாறு மில்லியன் ஏக்கராகும், இதில் ஏழு மில்லியன் நிலப்பரப்பு காடுகளாக உள்ளது இதிலும் ஒருமில்லியன் காடுகள் மகாவலி திசை திருப்புத்திட்டம் முடிவடையும் பொழுது அழிக்கப்பட்டுவிடும். இந்நிலையில் கட்டாயமாக மரங்களை நாட்டி சூழலைப்பாதுகாக்க வேண்டும் என்றார்.

மற்றும் சுகாதாரத் திணைக்கள கல்வி உத்தியோகத்தர் திரு க வைத்தீஸ்வரன், கல்வித்திணைக்கள முதியோர் கல்வி உத்தியோகத்தர் திரு. சி. எ , சுப்பிரமணியம், விவசாய அலுவலர் திரு. க. அரியகுட்டி ஆகியோரும் உரையாற்றினர்.

# விவசாயக் காப்புறுதி திட்டத்தில் திருத்தம்

(வவனியா)

''விவசாய காப்புறுதித்திட்டம் கடந்த சிறுபோகம் முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது

''ஒருஏக்கர் நீர்ப்பாசனச் செய்கைக்கு இப்போது நஷ்ட ஈட்டுப் பணமாக 2,200 ரூபா வழங்குகின்றோம்.

''மானாவாரி ஆயின் 1,000 ரூபா வழங்கப்படும். வெள்ளம், வரட்சி, நோய்த்தாக்கம் பூச்சி பறவைகள், காட்டு விலங்குகளினால் காப்புறுதி செய்யப்பட்ட பயிர் செய்கைக்கு அழிவு நஷ்டம் வழங்கப்படுமென வவனியா மாவட்ட கமத்தொழில் விவசாய காப்புறுதிச்சபை உதவிப் பணிப்பாளர் திரு கே. மகேந்திரன் தெரிவித்தார்.

திரு. மகேந்திரன் மேலும் தெரிவித்ததாவது;

''விவசாயிகளின் நன்மை கருதி எமது காப்புறுதித் திட்டம் திருத்தி அமைக்கபபட்டுள்ளது.

''காப்புறுதி செய்யப்படும் பணம் குறைவாகவேயுள்ளது. ஆனால் நஷ்டஈடு முழுக்க முழுக்க கொடுத்து வருகின்றோம்.

''ஒருவிவசாயி ஐந்து ஆண்டுகளுக்கு காப்புறுதி செய்து நஷ்டஈடுகோராவிட்டால்ஆறுவது ஆண்டு செய்கையினை நாமே இலவசமாக காப்புறுதி செய்வோம்

''காப்புறுதி செய்யப்படுவது தற்போது நெற்பயிருக்கு மட்டுமே யாகும்

''நெல்லு விதைப்புக்குமுன் நிலம் காப்புறுதி செய்யப்பட வேண்டும். அப்போது தன் நஷ்ட ஈடுவழங்கப்படும் விவசாய உத்தியோகத்தரிடம் காப்புறுதிப்பணம் செலுத்தி பற்றுச்சீட்டு பெறப்பட வேண்டும்

''ஒருபோகத்தில் செய்கை குறித்த ஏதோ ஒரு விதத்தில் அழியுமாயின் உடனடியாக கமநலசேவை நிலையத்திலுள்ள அழிவு பதிவுஇடாப்பில் அழிவு பற்றிய விபரம் ஏழு தினங்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

# கசிப்பு உற்பத்தியை நிறுத்த உண்ணாவிரதம்!

(சாவகச்சேரி)

கசிப்பு உற்பத்தியை முற்றுமுழுதாக நிறுத்தும் பொருட்டு, மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினர் மட்டுவில் தெற்குப் பகுதியில் அடுத்த வாரமளவில் உண்ணாவிரதம் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இவ்உண்ணாவிரதத்தில் கிராமப்பகுதி மக்கள் பலரையும் ஏனைய பொது ஸ்தாபனங்களையும் பங்குபற்றச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன

கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும்,
BERLIN செல்ல விமானச்சீட்டுக்களுக்கும்
உடனடியாகப் பதிவு செய்வதற்கும்,

AIR-TRANSIT

ஏயர் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30
7-00
HANDS OF THE RIBBER
(Horror Film)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி, தேவிகா
**நீலவானம்**
தீபாவளி வெளியீடாக
கே. பாலசந்தரின்
**பூவிலங்கு**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, லட்சுமி
**தங்கைக்காக**
18 முதல்
10-15, 12-30, 2-15,
4-15, 6-00
Brusce lee
DRAGON STRIKES AGAIN
(Colour)

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00 4-30
6-45
கடைசி 3 தினங்கள்
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்
15-10-84 முதல்
THE FAN

முதல்தர 'திகில்' படம்
**றீகல்** [யாழ் நகர்]
10 முதல்- (குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)
10-30, 2-15, 4-30, 6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 6-15
எஸ்.எஸ் ஆர்.-விஜயகுமாரி
**பூம்புகார்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15. 4-30
Roger Moore in
THE SWITCH
(adults only)

**வின்ஸர்** [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30.
6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
"BIG BOSS"
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)


# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—26 [12-10-1984]
வாரம்—வெள்ளி
திதி—துதியை காலை 9-29 ன் மேல் திருதியை
நக்ஷத்திரம்—பரணி பின் இரவு 12-19 வரை

மேடம்:- தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய ஸ்தலயாத்திரையொன்று மேற்கொள்ளப் படலாம் உடல் நிலையில் கவனம் வேண்டும்.

இடபம்:- உறவினர் வருகை உங்களுக்கு உவகையைத்தரும் சுற்று வட்டாரத்தில் மதிப்பு உயரும் குடும்பத்தில் கணவன் மனைவி உறவு மிகவும் சுமுகமாகஇருக்கும்.

மிதுனம்:- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

கடகம்:- ஆராய்ச்சிகளில் அதிகஆர்வம் தோன்றும் வாகனத்தின் மூலம் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு.

சிங்கம்:-உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும் புத்திர வழியாலும் புகழ்வந்து சேரும் தெய்வத்தின் துணையும் உண்டு.

கன்னி:: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராதவிபத்திற்கும் இடமேற்படலாம் ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

துலாம்:- குடும்பம் இன்று கலைக் கோயிலாக மாறும் இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும் களஸ்திர வழியால் பெருமைக்குஇடமுண்டு.

விருச்சிகம்:- விஷப் பரீட்சை மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழியால் பணத்தை இழக்க நேரிடும்.

தனுசு:- நினைத்தது நடக்கும் பந்து சனங்களின் கொண்டாட்டம் உண்டு பிதாவழி மூலம் எதிர்பாராத பொருள் வரவு உண்டு

மகரம்:- வணிகர்களுக்கு வியாபாரத்திற்கு இடமுண்டு புதிய முயற்சிகள் இன்று கைகூடும் செலவினங்கள் கைக் கடங்கியதாக இருக்கும்.

கும்பம்:- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள் புதுமையான செய்தியொன்றும் கிடைக்கக் கூடும்.

மீனம்:-பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும் திருடர் பயத்திற்கும் இடம் உண்டு முடக்கிய வேதனம் கவலையைத் தரலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை:

5-30 நாட்டுவளம் (ஆங்கிலம்)
5-35 'பிளாஷ் கோர்டன்' கார்ட்டூர்ன் சித்திரம் (ஆங்கிலம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-15 'பிக் புளுமாபிள்' பாகம்-1
6-40 மருத்துவத் தகவல்கள்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 பொம்மலாட்டம் (ஆங்கிலம்)
7-45 பொது அறிவுப் போட்டி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 உலக உணவு தினம்
9-10 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 இசைநிகழ்ச்சித் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

## விவசாயக் காப்புறுதி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

''அப்படி பதிவு செய்யப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனைப் பார்வையிட்டு ஒருமாத காலத்திற்குள் நஷ்ட ஈடு வழங்க ஆவன செய்யப்படும்.

''விவசாயிகளுடைய உழவு மாடுகளுக்கு காப்புறுதி செய்து கொள்ளலாம்.

''மாட்டின் பெறுமதியில் 4 வீதம் மட்டுமே காப்புறுதிப் பணமாக அறவிடப்படும் எந்த வேளையிலும் காப்புறுதி செய்து கொள்ள முடியும்.

ஒருவயது முதல் 10 வயது வரையிலான சகல இன கால் நடைகளையும் காப்புறுதி செய்து கொள்ள முடியும்.

ஆயிரம் ரூபா பெறுமதியான ஒருமாட்டினை காப்புறுதி செய்ய 40 ரூபா மட்டுமே ஒருவருடத்துக்கு அறவிடப்படும்.

காப்புறுதி செய்யப்பட்ட மாடு நோய் விபத்தினால் இறந்தால் பெறுமதியின் 80 வீதம் நஷ்டஈடாக வழங்கப்படும்.

''மாடு இறந்தவுடன் மாவட்ட மிருகவைத்தியருக்கு அறிவிக்கப்படவேண்டும்.

அவரது பரிசோதனை அறிக்கை கிடைத்து ஒருமாத இடைவெளிக்குள் நஷ்ட ஈட்டுப்பணம் வழங்கப்படும்.


**சாந்தி** (யாழ்நகர்)
10-30—2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
**சத்யசுந்தரம்**
(கலர் - புதிய பிரதி)


## கரம் போட்டியில் வெற்றி பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் புதிய ஐக்கிய விளையாட்டுக் கழகம் நவராத்திரியை முன்னிட்டு நடாத்திய கரம் போட்டியில் ஏ' பிரிவில் க. செல்வராசா, த. விமலச்சந்திரன் ஆகியோரும் 'பி' பிரிவில் மு. கனகரத்தினம், என். மணியம் ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

இப்போட்டிகள் நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. சி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளை திரு. சி. மகாதேவா வழங்கி உரையாற்றுகையில், கழகம் மேலும் பல விளையாட்டுக்களையும் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சமாதான நீதவான் திரு. க. செல்வராசா பேசுகையில் கழகம் விளையாட்டுத்துறையில் ஆற்றி வரும் பணியைப் பாராட்டினார். (வி)

## கி. அபி. சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நவாலி தெற்குகிராமஅபி.சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நவாலி றோ.க.த.க. பாடசாலையில்சண்லிடிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு.எஸ் ஜெயக்குமார், கிராம சேவை அலுவலர் திரு. ஆர் நித்தியானந்தன், உடுவில் உதவி அரசாங்க அதிபர்திரு ஏ.சி. செபநாயகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பின் வருவோர் இச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- டபிள்யூ.என். தேவகடாட்சம், செயலாளர்:- என். யோகநாதன், உப தலைவர்:-எஸ். சிவபாதம், ஏ.சி. ஜெயரட்ணம். உப செயலாளர்:- சிறில்சுகந்தரன், பொருளாளர்:-எம் பாலநாதன்.

ஏழு பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. கணக்குப்பரிசோதகராக என். ஜெயசிங்மும், போஷகர்களாக ஏ சி செபநாயகமும், சி. ஜெயரட்ணமும் தெரிவு செய்யப்பட்டனர்.

# யூனியன் கல்லூரி அறைகள் உடைக்கப்பட்டன!

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை யூனியன்கல்லூரியில் இரவு நேரம் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் பல அறைகள் உடைத்து திறக்கப்பட்ட போதும் பொருட்கள் எதுவும் கொள்ளையடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குள் இரவு 10 மணிக்கு புகுந்த துப்பாக்கி இளைஞர்கள் 10 பேர் கல்லூரி இரசாயன ஆய்வு கூடம் நிர்வாக அறை, மரவேலைக் கூடம், விளையாட்டு அறை ஆகியவற்றை உடைத்து அங்கு சோதனை நடத்திய பின் திரும்பிச் சென்று விட்டார்களாம்.

இச்சம்பவத்தின் போது பொருட்கள் எதுவும் கொள்ளையடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது, காங்கேசன்துறை பொலிசில் இதுபற்றி புகார் செய்யப்பட்டுள்ளது.

## ஆரம்ப சுகாதாரம் கிராம மக்களுக்கு அவசியம்

[மானிப்பாய்]

''ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்கள் சுகதேகிகளாக வாழவேண்டுமானால் ஆரம்ப சுகாதாரத்தை ஒவ்வொரு பிரஜையும் பேண முன்வர வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தவரும் தமதுவீட்டில் சுகாதாரத்தைப் பேணுவதோடு அயலவரது சுகாதாரத்தையும் பேணி நடக்க ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்'' என்று யாழ் மாவட்ட சுகாதாரப் போதனாசிரியர் திரு கா. வைத்தீஸ்வரன் இணுவில் ஆரம்ப சுகாதாரக் குழு அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இணுவில் அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு செ. சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு வைத்தீஸ்வரன் மேலும் பேசுகையில் சுகாதார விதிமுறைகள் பற்றி தற்போது பலர் அக்கறையின்றியிருப்பது வருந்தத்தக்கதுவென்றும் வாழ்வில் சுகமாக நோயின்றிவாழ்வதற்கே ஆரம்ப சுகாதாரம் பற்றிய அறிவு எல்லோருக்கும் மிக்க அவசியமாகின்றது என்றும் கூறினர்.

தலைவர் தமது உரையில் ஆரம்ப சுகாதாரக் கல்வியைப் பெற மக்களும் மக்களுக்காக இயங்கும் பொது மன்றங்களும் சேர்ந்து இயங்க வேண்டும்எனவும் இணுவில் கிராமத்தில் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட பல்வேறு துறையைச் சேர்ந்த சங்கங்களும் பொது ஸ்தாபனங்களும் சுகாதார மதிப்பீட்டைச் செய்யமுன்வர வேண்டும் மெனவும் இது இப்பகுதி சுகாதார நிலையைமேம்படுத்த மிகுந்த உதவியாக இருக்குமெனவும் கேட்டுக் கொண்டார்.

சுகாதார சேவையாளர் திருமதி கே. அல்பிரட் தமது வரவேற்புரையில் சுகாதாரத் துறையில் மக்கள்காட்டும் ஆர்வம் சமூகத்துக்குச் செய்யும் பெரும்பணியாக இருக்குமெனவும் இப்பகுதிமக்கள் இதில் கொண்டுள்ள ஆர்வம் நம்பிக்கையளிப்பதாக இருக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

நிர்வாகிகள் தெரிவின் போது தலைவராக திரு. செ. சோதிப்பெருமாள் ஜே.பியும் செயலாளராக திரு. தி. நந்தகுமாரும், பொருளாளராக திரு த. சண்முகலிங்கம் தெரிவாகினர் நான்கு வட்டாரங்களில் இருந்தும் பன்னிரண்டுபேரும் கிராமசேவை அலுவலர். விசேடசேவை அலுவலர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர், பொதுசுகாதார சேவையாளர் ஆகியோரும் நிர்வாகக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

## மரம் நடுகை இயக்கம்

(கிளிநொச்சி)

''உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி அடிகளின் நினைவாக தேசிய வீடமைப்பு அதிகார சபை கிளிநொச்சி மாவட்டத்தில் மரம் நடுகை இயக்கத்தை அங்குரார்பணம் செய்து வைப்பதையிட்டு மகிழ்ச்சியும் பெருமிதமுமடைகிறேன்''

இவ்வாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி கிளையால் கொண்டாடப்பட்ட மரம் நடுகை விழாவில் மரம் நடுகை இயக்கத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் பிரஸ்தாப சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் த. பூ முருகையா குறிப்பிட்டார்.

கிளிநொச்சி வீட்டுத் திட்டத்தில் நடைபெற்ற இவ் விழாவில் உதவி முகாமையாளர் க சின்னராசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

மாவட்ட முகாமையாளர் திரு முருகையா தொடர்ந்து பேசுகையில் ''ஒவ்வொருவர் வீட்டுக் காணிகள் தோறும் அந்தந்த நில வளத்திற்கேறப பழமரங்கள் நாட்ட முடிந்தால் பழமரங்களையும், ஏனைய இடங்களில் நிழல் மரங்களையும் நாட்டி குடியிருக்கும் வளவுகளை சோலைகளாக்கி மக்கள் பயன் பெற வேண்டும்'' என்று கூறினர்.

## அகதிகள் திருமணம்

(கிளிநொச்சி)

கடந்த ஆண்டு ஜூலை கலவரத்தால் பாதிக்கப் பட்டு கோணாவில் அகதிகள் முகாமில் வாழ்ந்து வரும் இருவரின் திருமணவைபவம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

சமூக சேவை உத்தியோகத்தர் பொன் நித்தியானந்தன் முகாம் பொறுப்பதிகாரியும் விஷேட சேவை அலுவலருமான எஸ் தர்மபாலன் ஆகியோர் இத் திருமணத்தை முன்னின்று நடத்திவைத்தனர்.

இம் முகாமில் வசித்து வந்த எஸ்.பாலசுப்பிரமணியம் மார்கிரெட் சாந்தி ஆகியோர்க்கே திருமணம் நடைபெற்றது.

## மந்திகையில் வான் கடத்தல்

[மாவிட்டபுரம்]

மந்திகை சந்தியில் வைத்து டெலிக்கா வான் ஒன்று 3 இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

34 ஸ்ரீ 9516 இலக்கமுடைய இவ்வான் கடந்த செவ்வாய் கிழமை காலை 11 மணிக்கு கடத்தப்பட்டதாக அதன் சாரதியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரபாகு சுப்பிரமணியம் பருத்தித்துறை பொலிசில் தெரிவித்துள்ளார்.

பொலிசார் விசாரணை மேற் கொண்டுள்ளனர்.

★ குண்டசாலை - மின்னேரிய இடைத்தேர்தல்:

# "நாட்டு மக்கள் 'தாச்சியிலிருந்து அடுப்பில் விழுந்த நிலை!"

## ஸ்ரீ ல. சு. க. வேட்பாளர் பேச்சு

[கண்டி]

"தாச்சியிலிருந்து அடுப்பில் விழுந்த நிலையில் நாட்டுமக்கள் இருக்கின்றனர். உணவுப் பொருட்களின்விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. 1977-ல் பதவிக்கு வந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்துவிட்டது" என்று குண்டசாலை இடைத்தேர்தல் சுதந்திரக்கட்சிவேட்பாளரான திரு டி எம் ஜயரத்ன தெரிவித்தார்.

குண்டசாலை - மின்னேரியா இடைத்தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. கடந்த வாரம் குண்டசாலையில் இடம்பெற்றதேர்தல்பிரசாரக்கூட்டமொன்றில் திரு ஜயரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு ஜயரத்ன தொடர்ந்து கூறியதாவது: "இந்தஅரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்துவிட்டது. பணக்காரர் கூட்டமே தொடர்ந்து முன்னேறுகிறது. கஷ்டப்படும் மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

"லஞ்சம், ஊழல் பொது வாழ்வில் சகஜமாகிவிட்டது. பொதுச் சொத்துக்களின் விரயம், சாதனை அளவை எட்டிவிட்டது. ஒழுக்க கலாசாரப் பண்புகள் சிதைந்துவிட்டன. இவற்றுக்குப் பகிரங்க பொருளாதார அமைப்பும் சுதந்திர வர்த்தகக் கொள்கையே காரணம்.

உழைக்கும் வர்க்கத்தின் ஜனநாயகத் தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் 1978-ஆம் ஆண்டு பொதுவேலை நிறுத்தத்தில் வேலை இழந்தனர். அவர்களுள் அநேகர் இன்னும் வேலை பெறுதுள்ளனர். இதனால் அவர்களின் குடும்பங்கள் சொல்லொணாத் துயர்படுகின்றன" என்றார். (கி)

---

## ஓய்வூதியம் பெறுவோரை தொடர்புகொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தள்ளாத வயதிலும் பிரயாணக் கஷ்டத்துக்கு மத்தியில் கடும் வெயிலில் கால் கடுக்க நின்று, யாழ் விளையாட்டரங்கில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, யாழ் அரசாங்க அதிபர் சொந்த ஊர்களிலேயே ஓய்வூதியம் பெற வசதிசெய்துள்ளார்.

அவ்வப்பகுதிகளிலுள்ள கிராமிய வங்கிகள் மூலம் வழங்கவே அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆனல் ஓய்வூதியம் பெறுவோர் பின்வரும் விபரங்களை உடனடியாக அரசாங்க அதிபருக்கு நேரிலோ, கடித மூலமோ தெரியப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் ஓய்வூதிய இலக்கம், இது வரை காலமும் பெற்ற வங்கியின் பெயர், கணக்கு இலக்கம், ஓய்வூதியம் பெற்ற தபால் அலுவலகத்தின் பெயர் ஆகியனவற்றைக் குறிப்பிட்டு அரசாங்க அதிபரிடம் உடன் சமர்ப்பிக்க வேண்டும்.

அப்படி ஓய்வூதியம் பெறுவதற்கு விரும்பாதவர்கள் தொடர்ந்தும் யாழ். விளையாட்டரங்கிலேயே பெற வேண்டிய நிலை ஏற்படும் என்றும் யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

### இன்னும் முடிவில்லை

இதேவேளை வடபகுதித் தபாலகங்கள் மூலம் வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை இம்மாதம், எங்கு வழங்குவதென்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஓய்வூதியம் வழங்குவதற்கான திகதியும் தீர்மானிக்கப்படவில்லை.

---

## மட்டக்களப்பில் நேற்று நடந்த கொள்ளைகள்

(மட்டக்களப்பு)

கடதாசிக் கூட்டுத்தாபன வைக்கோல் கொள்வனவு நிலையத்தின் சம்பளப்பணம் ரூபா 1லட்சத்து 80 ஆயிரம் நேற்று துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றிலுள்ள இந்த கொள்வனவு நிலையத்தில் நேற்றுக்காலை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது துப்பாக்கியுடன் வந்த 3 இளைஞர்கள் இந்தக்கொள்ளையை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

### செங்கலடியில்

செங்கலடி வங்கியிலிருந்து தபால் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட ரூபா 10 ஆயிரம் நேற்றுக்காலை கொள்ளையடிக்கப்பட்டது.

தபால் நிலைய அதிகாரிகள் இருவர் 30 ஆயிரம் ரூபாவை வங்கியிலிருந்து எடுத்துச் சென்றபோது சைக்கிளில் வந்த இருவர் ஒரு அதிகாரியிடமிருந்த 10 ஆயிரம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றனர் என்று கூறப்படுகிறது.

---

## இன்று சந்திப்பு

[கொழும்பு]

வல்வெட்டித்துறை ஹாட்லிக் கல்லூரிப் பகுதியிலிருந்து பொலிஸ் நிலையத்தை அகற்றுவது தொடர்பாகத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியை வடபகுதிக் கல்லூரிகள் அதிபர்கள் குழு இன்று சந்திக்கின்றது.

வர்த்தக அமைச்சில் இச்சந்திப்பு நிகழ இருக்கிறது.

---

## பிரதமரை அவமதிக்கிறதாம்!

(இ. கந்தசாமி)

பிரதமரை அவமதிப்பதாகக் கருதப்படும் மத்துகம எம்.பியின் உரையை பதிவேட்டிலிருந்து நீக்குமாறு உப சபாநாயகர் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் சபையில் மத்துகம எம். பி திரு அனில் முனசிங்க, தனக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் பேசியதாக பிரதமர் திரு பிரேமதாசா நேற்று சபையில் தெரிவித்ததைத் தொடர்ந்தே உப சபாநாயகர் இந்த உத்தரவை விடுத்தார்,

"சீசர் பலேஸ்" என்ற சூதாட்ட நிலையத்தைப் பிரதமர்திறந்துவைக்கிறார்" என்றே மத்துகம எம். பி. நேற்றுமுன்தினம் குறிப்பிட்டிருந்தார்.

---

## இளைஞர்கள் விசாரணையில்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் ஆயுதப்படையினர் நேற்று மேற்கொண்ட சோதனையில் சில இளைஞர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

---

## தையிட்டியிலும் சோதனை

[மாவிட்டபுரம்]

தையிட்டிப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் பலத்த சோதனைகளை மேற்கொண்டனர். வீடுகள்' தோட்டங்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் கடுமையான சோதனை மேற்கொள்ளப்பட்டதாம். (சூ)

---

## வான் விபத்தில் பலி

[யாழ்ப்பாணம்]

மானிப்பாயில் நேற்றுக்காலை நடந்த வான் விபத்தில் 50 வயதான வேலுப்பிள்ளை என்பவர் பலியானர். காயமடைந்த இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுஅங்குமரணமானர். [க]

---

## சனி, ஞாயிறிலும் ஓய்வூதியம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கச்சேரி வங்கியில் ஓய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கு இம்மாதம் 13-ம் திகதி சனிக்கிழமையும், 14 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் குருநகர் வங்கியில் ஓய்வூதியம் வழங்க விசேட ஏற்பாடு செய்பட்டுள்ளது. [க]

---

## வெளிநடப்பு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத் தலைமைக்காரியாலய கிளை ஊழியர்கள் ஏற்கனவே தெரிவித்தபடி நேற்று முழு நாள் வெளிநடப்புச்செய்யவில்லை. தவிர்க்கமுடியாத காரணங்களால் இந்த வெளிநடப்பு இடம்பெறவில்லை என்றும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார் (க)

---

## வைத்தியப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட 2ம் வருடப் பரீட்சையில் சித்திஅடைந்தோருக்கான வைத்தியசாலைப் பயிற்சி. இம் மாதம் 22ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக, யாழ் மருத்துவ பீட, பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார்

இந்த வைத்தியசாலை பயிற்சி யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெறும் என்றும் பேராசிரியர் தெரிவித்துள்ளார் (மா)

---

## தபாலில் பயிற்சி தமிழில் இல்லை

(கொழும்பு)

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் போதே தபால் மூலம் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஈ.எல் விஜயமன்ன தெரிவித்துள்ளார்.

இத்தகவலை நேற்று நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்த அவர், தமிழ் மொழியில் பயிற்சிபெற 260 பேர் மட்டுமே விண்ணப்பித் திருப்பதால் தமிழ்மொழியில் பயிற்சி அளிக்க முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவிததார். (கி)

---

## ஹாட்லியில் கொள்ளை

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தட்டச்சு இயந்திரம், மரவேலை உபகரணங்கள், தளபாடங்கள் என்பன இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கல்லூரியின் உப- அதிபர் அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்த தட்டச்சு இயந்திரமும், மரவேலைக்கூடம் உடைக்கப்பட்டு அங்கிருந்த மரவேலை உபகரணங்களும், ஆசிரியர்கள் தங்கும் அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த தளபாடங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கல்லூரி அதிபர் திரு டபிள்யூ என் எஸ் சாமுவேல் பருத்தித்துறை பொலிசில் புகார் செய்துள்ளார்

---

கிளிநொச்சியில்

## ஈழநாடு வாசகர் வட்டம்

(கிளிநொச்சி)

ஈழநாடு வாசகர் வட்ட அமைப்புக்கூட்டம் ஒன்று வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் மாலை 3 மணியளவில் நடைபெறும். ஆசிரியர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரளான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பாவனையாளர் சங்கம் பாவனையாளர்களின் நலன் கருதி இப்பகுதியிலுள்ள வர்த்தகர்களுடன் இணைந்து நடாத்தும் கருத்தரங்கு வரும் 14-ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் டாக்டர் பாக்கியநாதர் அத்தனுசியார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ் மாவட்ட பிரதி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு மார்க்கண்டு, சண்டிருப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன், யாழ் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் ஆகியோர் உட்படப்பலர் கலந்து கொள்வார்கள்.

---

## பாராட்டு விழாக்கள்

(சுழிபுரம்)

வித்துவான் மு. சபாரத்தினத்தின் சேவைநலம் பாராட்டு விழா வரும் ஞாயிற்றுக்கிழமை காலை காரைநகர் "கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலய" நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபரும், விழாக் குழுத் தலைவருமான திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும். நல்லை ஆதீன முதல்வர் விழாவை ஆரம்பித்துவைப்பார். பாராட்டுரைகள், பட்டமளிப்பு, பொன்னடை போர்த்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும் பல பிரமுகர்கள் பாராட்டுரைகள் வழங்குவார்கள் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி விழா மலரை வெளியிட்டு வைப்பார்.

★

(சாவகச்சேரி)

கைதடிமேற்குப் பகுதியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்துவரும் ச. ஞானராசாவின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக சரஸ்வதி சனசமூக நிலைய அங்கத்தவர்களால் பாராட்டுவிழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சரஸ்வதி சனசமூக நிலையம், சனசமூக நிலையங்களின் ஒன்றியம் பாடசாலை அபிவிருத்திச் சங்க, கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் அபிவிருத்திக்கழகம் போன்ற பொது நிறுவனங்கள் பலவற்றில் பெரும்பதவிகள் வகித்ததுடன் கிராமத்தில் நடைபெறுகின்ற பல செயற்திட்டங்களுக்கும் வழிநடத்துனராக இருந்தமையை கௌரவிக்கும் முகமாகவே இந்த விழா நடைபெறவுள்ளது.

---

## ரூ. 17 ஆயிரம் உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான யாழ் ஆஸ்பத்திரி ஊழியர் திரு க. பொய்யாமணி குடும்பத்துக்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள் 17 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

நாளை சனிக்கிழமை ஆஸ்பத்திரி விரிவுரை மண்டபத்தில் வைத்து, வைத்திய அதிகாரி டாக்டர் நச்சினார்க்கினியன் திருமதி பொய்யாமணியிடம் வழங்கவுள்ளார். (மா)

---

## இரண்டு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யாளம் காண்பதற்காக வைத்திருந்தனர்.

நேற்றுக் காலை 9-30 மணியளவில், வாகனம் ஒன்றில் ஆஸ்பத்திரி பிரேத அறையின் பின் பக்க வாயிலால் வந்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி, துப்பாக்கி முனையில் இருசடலங்களையும் கடத்திச் சென்று விட்டனராம்,

இரு சடலங்களும் பற்றிய தகவல்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை தெரிவிக்கப்படவில்லை. (மா)

---

## கொல்லப்பட்டவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதலி அண்மையில் இப்பத்பத்திரிகைக்கு அளித்த பேட்டிக்கு பதிலளிக்கும்வகையில் திரு அமிர்தலிங்கம் இக்கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

சுன்னகம், யாழ்ப்பாணம், கைதடி, வவனியா போன்ற இடங்களில் ராணுவத்தினராலும் பொலிசாராலும் கொல்லப்பட்டவர்கள் கடைக்காரரும், சிப்பந்திகளும், சாமான்கள் வாங்க வந்த மக்களும், அப்பாவி பஸ்பிரயாணிகளுமே என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (இ)

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post off ce Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram number Telephone 22389 - 24126.